# *அப். 15:20, 28ன் தடைகள் இன்றைக்கு நமக்கும் பொருந்துகின்றனவா?*

*அப். 15:20 மற்றும் 29ன் தடைகள் ஆதி சபையாரை எந்த அளவுக்குக் கட்டுப்படுத்தின என்பது பற்றிக் கல்வியாளர்கள் கருத்து ஒருமித்துச் செல்வதில்லை. சிலர் (இவர்களை நான் ''அணி 1'' என்பேன்) இந்தத் தடைகள் ஒரு விசேஷித்த சூழ்நிலைக்கு மட்டுமே ஏற்றவைகளாயிருந்தன என்கின்றார் கள். மற்றவர்கள் ("அணி 2") இந்தத் தடைகள் உலகளாவிய வைகள் என்றும், இன்றும் அவைகளை நாம் கைக்கொள்ள வேண்டும் என்றும் கூறுகின்றார்கள்.*

*"அணி 2"ஐச் சேர்ந்தவர்கள் "அவசியமான இவைகளை" (வ. 29) என்ற வார்த்தைகளைச் சுட்டிக்காட்டுகின்றார்கள்; ஆனால் "அணி 1" ஐச் சேர்ந்தவர்களோ, இவ்வார்த்தையானது "யூதர்கள் மற்றும் புறஜாதி கிறிஸ்தவர்களின் ஐக்கியத்திற்கு அவசியமானவைகள்'' என்று அர்த்தப்படுமே அல்லாது, "இரட்சிப்புக்கு அவசியமானவைகள்" என்று அர்த்தப்படாது என்கின்றார்கள். அணி 2ஐச் சேர்ந்தவர்கள், ''பரிசுத்த ஆவியானவர் இக்கடிதத்தை அப். நடபடிகள் புத்தகத்தில் சேர்த்துள்ள செயலானது நாம் இதன் அறிவுரைகளைக் கைக் கொள்ள வேண்டும் என்று அவர் எதிர்பார்ப்பதையே காட்டுகின்றது" என்று கூறுகின்றார்கள், ஆனால் அணி 1ஐச் சேர்ந்தவர்களோ இது அவ்வாறு இருக்க வேண்டும் என்பது அவசியமில்லை என்று வலியுறுத்துகின்றார்கள். இதற்கு மாறாக அப். 15ன் நிகழ்ச்சிகள், (1) ஆதி சபையின் முக்கியமான ஒரு வரலாறு என்ற வகையிலும் (2) பிரச்சனைகளைக் கையாளு வதற்கான பொதுவான வழியொன்றை நமக்குப் போதிப்பதற் காகவும் பதிவு செய்யப்பட்டுள்ளன என்ற ஆலோசனையை முன் வைக்கின்றார்கள்.*

*அணி 1 ஐச் சேர்ந்தவர்கள், அந்தக் கடிதமானது குறிப்பிட்ட சிலருக்கு மட்டுமே (15:23) எழுதப்பட்டது என்கின்றார்கள், ஆனால் அணி 2 ஐச் சேர்ந்தவர்கள், இந்தக் கடிதம் அவர்களுக்கு*

அப்பாலும் எடுத்துச் செல்லப்பட்டதே என்கின்றார்கள் (16:4, 6). மேலும் அணி 2ஐச் சேர்ந்தவர்கள், பவுலின் நிருபங்கள் ஒவ்வொன்றும் குறிப்பிட்ட சிலருக்குத்தான் எழுதப்பட்டன (ரோமர் 1:7; 1 கொரி. 1:2 முதலியன), ஆனால் அவைகளில் உள்ள அறிவுரைகள் இன்று நமக்கும் நடைமுறைப்படுத்தப் படுகின்றனவே என்கின்றார்கள். அணி 1ஐச் சேர்ந்தவர்கள், "அப். 15ன் கடிதம் உலகளாவிய முறையிலிருக்க விரும்பப் பட்டதென்றால், புறஜாதி கிறிஸ்தவர்களுக்கு விருத்தசேதனம் செய்விப்பதா அல்லவா என்ற அந்தக் கருத்து பற்றி எருசலேமில் நடந்த விவாதத்தைக் குறித்துப் பவுல் கலாத்தியருக்கு எழுதுகையில் அந்தக் கடிதத்தைக் குறிப்பிடாதது ஏன்? என்று கேட்கின்றார்கள். மேலும் அவர்கள் "பவுல் கொரிந்து கிறிஸ் தவர்களுக்கு எழுதும்போது, விக்கிரகங்களுக்குப் படைக்கப் பட்டவைகளைப் புசிப்பது பற்றிய விஷயம் அவர்களின் விருப்பத் தேர்வு என்று எழுதினாரேயல்லாமல், அவ்விடத்தில் அப். 15ன் தடைகளை வலியுறுத்தவில்லையே'' என்றும் கூறுகின்றார்கள். இதற்கு அணி 2ஐச் சேர்ந்தவர்கள், "கலாத் தியருக்கு எழுதின நிருபத்தில் பவுல், தமது புரிந்து கொள்ளு தலுக்கு அப்போஸ்தலர்கள் எந்த வித பங்களிப்பும் அளித்த தில்லை என்று வலியுறுத்தினார் (கலா. 2:6). எனவே ஆதி அப்போஸ்தலர்களின் விதிகளை மறுபடி அங்கு கூறுவது என்பது தமது கூற்றையே அவர் மறுப்பது போல் ஆகிவிடும். பவுல் கொரிந்தியருக்கு எழுதிய நிருபத்தில் விக்கிரகங்களுக்குப் படைத்தவைகளை உண்ண கிறிஸ்தவர்களுக்கு உரிமை உண்டு என்று தொடங்கி, மற்றவர்கள் இடறலடையாமல் இருப்பதற் காக கிறிஸ்தவர்கள், விக்கிரகங்களுக்குப் படைத்தவைகள் என்று அறிந்த உணவுகளை உண்ணாமல் இருக்க வேண்டும் என்று முடித்தார் (1 கொரி. 10:23-33) என்கின்றார்கள். வேறு வார்த்தைகளில் சொல்வதானால், மற்றவர்களின் நன்மைக்காக, விக்கிரகங்களுக்குப் படைத்தவைகளைப் புசிக்க வேண்டாம் என்று அப். 15ல் உள்ள அதே அடிப்படை முடிவையே பவுலும் அடைந்தார்."

புதிய ஏற்பாடு வேசித்தனத்தையும், விக்கிரகங்களுக்குப் படைத்தவைகளை உண்ணுவதையும் பொதுவாகக் கண்டனம் பண்ணுகிறது (1தெச. 4:3, 5; 1 கொரி. 10:19-21; வெளி. 2:14, 20ஐக் காணவும்) என்று நம்மில் பலர் ஒப்புக் கொள்ளுகின்

*றோம். ஆகவே இரத்தத்தை உண்பது/குடிப்பது என்பதினா லேயே கருத்து வேறுபாடு மையம் கொண்டிருக்கின்றது, இதைப் பற்றிப் புதிய ஏற்பாட்டில் வேறு எங்கும் குறிப்பிடப் படவில்லை. "வாக்குவாதத்தைக் கையாள மேலும் சில குறிப் புகள்" என்ற பாடத்தில் குறிப்பிட்டபடி, இந்தப் பழக்கமானது மோசேயின் நியாயப்பிரமாணம் கொடுக்கப்படுவதற்கு முன்னும் (ஆதி. 9:4) மற்றும் நியாயப்பிரமாணத்திலும் (லேவி. 17:8-16) கண்டனம் செய்யப்பட்டது. கூறப்பட்ட இறையியல் காரணங்களுக்காகவும், "நோய் பரவுவதைத் தடுப்பது" என்ற கூறப்படாத நடைமுறை காரணத்திற்காகவும் இந்தத் தடை விதிக்கப்பட்டது.*

*நியாயப்பிரமாணம் தரப்படுவதற்கு முன்பே இரத்தத்தை உண்ணுதல்/குடித்தல் கண்டனம் செய்யப்பட்டுள்ளதால், இது தேவன் என்றுமே விரும்புகின்ற ஒரு பொதுவான கொள்கை யாகவே காணப்படுகின்றது. ஆகையால் நான் இரத்தத்தை உண்ணுவதில்லை அல்லது குடிப்பதில்லை. ஆயினும் இக் கருத்தை பிடிவாதமாக என்னால் வலியுறுத்த முடிவதில்லை. "அவனவன் தன்தன் மனதிலே முழு நிச்சயத்தை உடையவ னாயிருக்கக் கடவன்" (ரோமர் 14:5ஆ).*

*(இரத்தத்தை உண்ணுதல்/குடித்தல் இன்றும் தடை செய்யப்பட்டிருந்தாலும், யேகோவா சாட்சிகள் கூறுவது போல இது, இரத்தம் செலுத்துதலைத் தடைசெய்வதில்லை.)*

# தேவனுடைய அழைப்பிற்குப் பதில் கொடுத்தல் (16:9-15)

*நான் இளைஞனாயிருந்த போது, புரிந்து கொள்ள முடியாமல் இருந்த அநேக விஷயங்களில், பவுல் துரோவாவில் இருந்து பிலிப்பி பட்டணத்துக்குச் சென்றது பற்றி ஏன் பிரசங்கியார்கள் உள்ளக் கிளர்ச்சியடைந்தார்கள் என்பதும் ஒன்று ஆகும். "கடைசியாக சுவிசேஷம் ஐரோப்பாவையும் சென்று அடைந்தது!" என்று அவர்கள் ஆச்சரியப்பட்டிருக் கலாம். ''பவுல் ஐரோப்பாவில் மனமாற்றிய முதல் நபர் லீதியாள்!'' என்று அவர்கள் கூறுகின்றார்கள். நான், "அதற் கென்ன?" என்று நினைத்தேன். "பவுலும் மற்றவர்களும் ரோம ஆளுகைக்குட்பட்ட ஒரு பகுதியில் இருந்து, ரோம ஆளுகைக்கு உட்பட்ட இன்னொரு பகுதிக்குச் சென்றார்கள்.'' புதிய ஏற்பாடு எழுதப்பட்ட காலங்களில் அப்பகுதியானது ஐரோப்பா என்று அழைக்கப்பட்டதா என்பதே எனக்குச் சந்தேகமாய் இருந்தது.*

*அந்த நாட்களில் அப்பகுதியானது ஐரோப்பா என்று அழைக்கப்பட்டதா என்பதில் இன்னமும் எனக்குச் சந்தேகம் இருந்தாலும், அதில் இருந்த உள்ளக் கிளர்ச்சி என்ன என்பதைப் புரிந்துள்ளேன். நாம் இன்று பயன்படுத்தும் ஆசியா, ஐரோப்பா என்ற பெயர்கள் அன்று இல்லாமல் இருந்திருக்கலாம், ஆனாலும் கூட பழங்காலத்திலும் கிழக்குக்கும் மேற்குக்கும் வேறுபாடு உணரப்பட்டிருந்தது;[1] அவைகள் ஒரு எல்லையி னால் இணைக்கப்பட்டிருந்தாலும் அவை வித்தியாசப்பட்ட உலகங்களாகவே இருந்தன. நான் (துரோவாவின் சிதிலங்கள் உள்ள) துருக்கியில் இருந்து, கிரேக்கு தேசம் வரையிலும் பயணம் செய்துள்ளேன், இவைகளில் உள்ள கலாச்சார வேறு பாடு பற்றி நான் சான்று கூற முடியும். மக்கெதோனியனின் அழைப்புக்குப் பவுலும் அவருடன் இருந்தவர்களும் பதில் கொடுத்த போது, அவர்கள் ஊழியத்தில் ஒரு புதிய களத்தைத்*

*திறந்து வைத்தார்கள்!*[2]

இந்தப் பாடமானது மக்கெதோனியனின் அழைப்பு, அதற்குப் பவுலின் பதில் மற்றும் அன்றும் இன்றும் அதன் விளைவுகள் ஆகியவற்றை மையமாகக் கொண்டுள்ளது. இப்பாடத்தில் நாம் தேவனுடைய அழைப்புக்கு எப்படி பதில் கொடுக்க முடியும் மற்றும் எப்படி பதில் கொடுக்க வேண்டும் என்பது பற்றிய சில விஷயங்களைக் கற்றுக் கொள்ளலாம் என்றும் நம்புகின்றோம்.

## வேதவசனம் ஆராயப்படுகின்றது

நமது முந்திய பாடத்தில், பவுல், சீலா மற்றும் தீமோத்தேயு ஆகியோர் ரோமானிய மாகாணமான ஆசியாவுக்குச் செல்ல முயற்சி செய்த போது, தேவனால் தடை பண்ணப்பட்டதைக் கண்டோம். பிறகு அவர்கள் வடக்கில் இருந்த பித்தினியா மாகாணத்துக்குச் செல்ல முயற்சி செய்தார்கள், ஆனால் அதையும் தேவன் அனுமதிக்கவில்லை. அவர்கள் மறுபடியும் வந்த வழியே திரும்பாமல் செல்ல வேண்டுமானால் மேற்கு நோக்கி மட்டுமே செல்ல முடியும். மேற்கு முகமாய்ச் சென்று கடைசியில் துரோவா என்ற துறைமுகப் பட்டணம் வந்து சேர்ந்தார்கள். கடற்கரையிலே நின்று எழில் மிக்க ஏஜியன் கடலைப் பார்க்கையில் ஏன் அங்கிருந்தார்கள் என்பது பற்றியும், என்ன செய்யும்படி அவர்களிடத்தில் தேவன் எதிர்பார்த்தார் என்பது பற்றியும் அவர்கள் ஆச்சரியம் அடைந்திருப்பார்கள் என்பதில் வியப்பேதும் இல்லை.[3]

### ஒரு அழைப்பு (16:9, 10)

அவர்கள் அதிக நாள் ஆச்சரியப்பட்டுக் கொண்டிருக்க அவசியமில்லாமல் போயிற்று. “அங்கே இராத்திரியிலே[4] பவுலுக்கு ஒரு தரிசனம் உண்டாயிற்று; அதென்னவெனில், மக்கெதோனியா[5] தேசத்தான் ஒருவன் வந்து நின்று: ‘நீர் மக்கெதோனியாவுக்கு வந்து எங்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்று தன்னை வேண்டிக் கொண்டதாக இருந்தது’ ” (வ. 9). மக்கெதோனியா என்ற நாடானது கிரேக்க நாட்டின் வட பகுதியாகும், இது மெக்தனின் இரண்டாம் பிலிப்புவினாலும், அவர் மகன் மகா அலெக்சாந்தரினாலும் புகழ் பெற்றதாக் கப்பட்டிருந்தது. மக்கெதோனியாவானது துரோவாவின்

வடமேற்குப் பகுதியில் அமைந்திருந்தது, ஏஜியன் கடலின் மேல் பகுதியின் குறுக்கே பயணம் செய்து இந்நாட்டை அடைய முடியும். (வரைபடத்தைக் காணவும்.)

பவுல் கிழக்குப் பகுதியைச் சேர்ந்தவராயிருந்தார், சுவிசேஷத்தை மேற்குப் பகுதிக்கு எடுத்துச் செல்வது என்பது அவரது உடனடித் திட்டங்களின் ஒரு பகுதியாய் இருக்க வில்லை என்பது உறுதியாகும். பின்வரும் உண்மைகளைக் கவனியுங்கள்: (1) பவுல் முதலில் ஆசியாவுக்கும் பிறகு பித்தினியாவுக்கும் செல்ல முயற்சி செய்தார், இவை இரண்டும் கிழக்கிலேயே அமைந்திருந்தன. அநேக வருடங்களுக்கு, ஒருவேளை பவுலின் ஆயுள் முழுவதும் ஊழியம் செய்யப் போதுமான பகுதிகள் கிழக்கில் நிறைந்திருந்தன. (2) கர்த்தர் வேறெங்கும் செல்லும்படி அனுமதிக்காதபோதுதான் பவுல் மேற்கு நோக்கிச் சென்றார். (3) பவுல் துரோவாவின் துறை முகத்தில் நின்று, மேற்கு முகமாக பார்த்துக் கொண்டிருந்த போதும் கூட, ஏஜியன் கடலின் ஊடே சென்று புதியதொரு கலாச்சாரம் கொண்ட புதியதொரு மக்கள் இனத்திற்கு சுவிசேஷத்தை அறிவிக்க வேண்டும் என்று அவர் ஏற்றுக் கொள்வதற்குக் கர்த்தரிடத்திலிருந்து ஒரு தரிசனம் பெற வேண்டியிருந்தது அவசியமாயிற்று.

பவுல் தரிசனத்தைப் பெற்றவுடன், தாமதமின்றி அதைப் பற்றித் தமது கூட்டாளிகளிடம் பகிர்ந்து கொண்டார், அது தேவனிடத்திலிருந்து வந்த செய்தி என்று அவர்கள் உணர்ந் தனர். "அந்தத் தரிசனத்தை அவன் கண்ட போது, அவர்களுக் குச் சுவிசேஷத்தை அறிவிக்கும்படி கர்த்தர் எங்களை அழைத்தாரென்று[6] நாங்கள் நிச்சயித்துக் கொண்டு, உடனே மக்கெதோனியாவுக்குப் புறப்பட்டுப் போகப் பிரயத்தனம் பண்ணி" (வ. 10). ஏற்கனவே குறிப்பிட்டபடி, "எங்களை" மற்றும் "நாங்கள்" என்ற வார்த்தைகள், மருத்துவரான லூக்கா இவ்விடத்தில் ஊழியக் குழுவுடன் சேர்ந்து கொண்டதைப் பற்றி நமக்குக் கூறுகின்றன.

மக்கெதோனியாவைச் சேர்ந்த நபர், தரிசனத்தில், "... வந்து எங்களுக்கு உதவி செய்ய வேண்டும்" என்று மட்டுமே கூறியிருந்தார், ஆனாலும், "அவர்களுக்கு சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி" தேவன் அழைத்தார் என்று தீர்மானிக்கப் பட்டது. சபையானது இந்த உலகத்திற்கு அநேக விதங்களில்

உதவி செய்ய முடியும், செய்ய வேண்டும். ஆனால் சுவிசேஷத்தைப் பகிர்ந்து கொள்வதென்பதுதான் சபையானது இவ்வுலகத்திற்குச் செய்யும் *தனிச் சிறப்புள்ள* உதவியாகும்! நமக்குக் கிடைக்கும் சமயத்திற்குத் தக்கதாய் யாவருக்கும் நன்மை செய்ய வேண்டும் (கலா. 6:10), ஆனால் நமது வாழ்வின் விசேஷித்த நோக்கத்தை (எபே. 3:10, 11, 21; மத். 28:18-20) ஒருபோதும் நாம் மறந்து விடக்கூடாது.

உடனே அவர்கள் துரோவாவில் இருந்து மக்கெதோனியா வுக்குச் செல்லும் கப்பல் ஒன்றைத் தேடினார்கள். தேவனு டைய கிருபையால் விரைவிலேயே அது அவர்களுக்குக் கிடைத்தது. ஒருவர் தேவனுடைய அழைப்புக்குப் பதில் கொடுக்கும்போது, தேவன் அவருடன் கூட இருந்து, அவரது முயற்சிகளை ஆசீர்வதிக்கின்றார்.

**ஒரு அறைகூவல் (16:11, 12அ)**

வசனங்கள் 11 மற்றும் 12 ஆகியவை பயணத்தைப் பற்றிக் கூறுகின்றன. "துரோவாவில் கப்பல் ஏறி, சாமோத்திராக்கே தீவுக்கும் ..." (வ. 11அ). துரோவாவுக்கும், அவர்களின் அடைவிடத்திற்கும் இடையில் ஏறக்குறைய பாதி தூரத்தில் இருந்த சாமோத்திராக்கே, மலைகள் நிறைந்த ஒரு தீவாயிருந்தது. அநேகமாக அவர்கள் பயணம் புறப்பட்ட முதல் இரவிலேயே சாமோத்திராக்கேயின் அருகில் நங்கூரம் பாய்ச்சியிருப்பார்கள். அவர்கள் "நேராய் ஓட" முடிந்தது என்ற உண்மையானது, காற்று அவர்களின் பின்னால் இருந்ததைச் சுட்டிக்காட்டுகின்றது.[7] தேவன் அவர்களின் அடைவிடத்தை நோக்கி அவர்களைத் துரிதப்படுத்திக் கொண்டிருந்தார்.

நடந்தவைகளைப் பின்னோக்கிப் பார்த்து, சிறிய நிகழ்ச்சிகளாய்க் காணப்படக் கூடியவைகள் தொடர்ந்து வந்த வரலாற்றை எவ்விதம் பாதித்தன என்பதைக் காண்பது மிகவும் வசீகரமுடையதாய் இருக்கின்றது. துரோவாவில் இருந்து மக்கெதோனியா சுமார் 150 மைல்கள் தூரம் இருந்தது, இதைப் பயணம் செய்ய அவர்களுக்கு இரண்டு நாட்களே தேவைப் பட்டன, ஆனால் இதனால் மனிதகுல நிகழ்ச்சிகள் என்றென் றைக்கும் மாற்றத்திற்குள்ளாயின. இந்த (அல்லது இது போன்ற) பயணம் மேற்கொள்ளப்பட்டிராவிட்டால், இன்று அநேகமாக, கிழக்கு உலகில் இருக்கும் சபைகள் மேற்கு

உலகிற்கு ஊழியக்காரர்களை அனுப்பிக் கொண்டிருக்கும்.

அடுத்த நாளில் பவுலும் அவரது பயணத் தோழர்களும் "நெயாப்போலி" (வ. 11ஆ; "நெயாப்போலி" என்பது "புதிய" [*neos*] என்பதற்கும் "நகரம்" [*polis*] என்பதற்குமான கிரேக்க வார்த்தைகளை இணைத்துப் பெற்றதாகும். இவ்விதமாக "நெயாப்போலி" என்பது "புதிய நகரம்" என்று அர்த்தம் தரும். இன்றைய நாட்களில் இந்நகரம் "பெண் குதிரை" என்று பொருள்படும் Kavalla என்று அழைக்கப்படுகின்றது.) பட்டணத்திற்கு வந்தார்கள். 9 அல்லது 10 மைல் தொலைவில் உள்நாட்டில் இருந்த பிலிப்பி பட்டணத்தின் துறைமுகமாக நெயாப்போலி விளங்கியது. நெயாப்போலியின் வழியாக புகழ் பெற்ற எக்னேஷியன் சாலை (இந்தப்பழங்காலக் கற்சாலையின் சில பாகங்கள் தோண்டிக் கண்டறியப் பட்டுள்ளன. பழங்கால வாகனங்களால் உண்டான தடங்களை இன்னமும் இவைகளில் காண முடியும். வரைபடத்தைப் பார்க்கவும்.) சென்றது, இது ஆதிரியாக் கடலில் (ஆதிரியாக் கடலைக் கடந்ததும் இத்தாலியும், ரோமாபுரிக்கு இட்டுச் செல்லும் அப்பியு சாலையும் இருந்தது [28:15].) இருந்து நெயாப்போலி வழியாக பைசாந்தியத்திற்குச் (பைசாந்தியம் பின்னாளில் கான்ஸ்டான்டிநோபிள் என்று அறியப்பட்டது. இன்றைய நாட்களில் இது இஸ்தான்புல் என்று அழைக்கப்படுகின்றது.) செல்லும் ரோமானியச் சாலையாகும். அந்த ஊழியக்காரர்கள் நேரத்தை வீணாக்காமல், அப்புகழ் பெற்ற சாலைக்குச் சென்று, பிலிப்பி[8] பட்டணத்தை நோக்கி மேற்கு - வடமேற்கு முகமாய் முன்னோக்கிச் சென்றார்கள். அவர்கள் நெயாப்போலியின் வடக்கில் இருந்த கரையை ஏறிக் கடந்து, பிலிப்பி பட்டணத்தின் சமவெளியில் இறங்கி முன் சென்றிருப்பார்கள் (வ. 12அ).

தரிசனத்தில் வந்த மனிதர், "மக்கெதோனியாவுக்கு வந்து" என்று பொதுவாகக் கூறியிருந்தார், எனினும், பவுலும் மற்றவர்களும் அம்மாகாணத்தின் வேறிடம் எதற்காவது செல்லாமல் பிலிப்பி பட்டணத்திற்குச் சென்றது ஏன்? சந்தேகமின்றி, அவர்கள் கர்த்தருடைய வழி நடத்துதலைச் சார்ந்திருந்தார்கள். அவர்கள் கண்ட முதலாவது மெக்கெதோனியாக் கப்பல் நெயாப்போலிக்குச் சென்றது. மெக்கெதோனியா நாடானது நெயாப்போலிக்கு மேற்கில், எக்நேஷியன் சாலை முழுவதிலும் பரவியிருந்ததால், இதை அவர்கள்

அச்சாலையின் வழியே மெக்கெதோனியாவைக் கடப்பதற்கும், தாங்கள் செல்லும் முக்கிய பட்டணங்களில் நற்செய்தி அறிவிப்பதற்கும் ஒரு அடையாளமாக எடுத்துக் கொண்டிருக்க லாம். பிலிப்பி என்பது முதலாவது முக்கிய பட்டணமா யிருந்தது.

பிலிப்பி பட்டணமானது, "மக்கெதோனியா தேசத்து நாடு களில் ஒன்றிற்குத் தலைமையானதும், ரோமர் குடியேறினதும்" என்று (வ. 12அ) லூக்காவினால் விளக்கப்படுகின்றது. "ஒரு தலைமையான பட்டணம்" என்ற சொற்றோடர் பற்றிக் கல்வியாளர்கள் மத்தியில் கருத்து வேறுபாடு நிலவுகின்றது. இவ் வார்த்தைகள் மெக்கெதோனியாவின் தலைநகர் என்று அர்த்தப்படுத்த முடியாது, ஏனென்றால் அந்த முழு தேசத்திற் கும் தெசலோனிக்கே பட்டணமே தலைநகரமாய் இருந்தது. இந்தச் சொற்றொடரானது, பிலிப்பி பட்டணம் இருந்த மாகாணத்திற்குத் தலைநகர் என்றும் அர்த்தப்பட முடியாது, ஏனென்றால் அந்த பெருமை அம்பிபோலி பட்டணத்திற்கு உடையதாயிருந்தது. அநேகமாக லூக்கா அந்தப் பகுதியில் இருந்த மற்ற பட்டணங்களோடு ஒப்பிட்டுப் பேசுகையில் பிலிப்பி ஒரு முக்கியமான பட்டணமாயிருந்தது என்று அர்த்தப்படுத்தியிருப்பார்.[9]

"ரோமர் குடியேறினது"[10] என்ற சொற்றொடர்தான் நமது பாடத்திற்கு முக்கியத்துவம் பெற்றதாக இருக்கின்றது. அப். நடபடிகள் புத்தகத்தில் குறிப்பிடப்பட்டவைகளில் ஆறு பட்டணங்கள் ரோமர் குடியேற்றப் பட்டணங்கள் ஆகும். (அந்த ஆறு பட்டணங்கள்: பிசீதியாவின் அந்தியோகியா, லீஸ்திரா, துரோவா, பிலிப்பி, கொரிந்து மற்றும் பித்தொலமாய் ஆகும். இவைகளில் சிலவற்றைப் பற்றி நாம் ஏற்கனவே படித்துள்ளோம்.) ஆனால் பிலிப்பி பட்டணம் மட்டுமே இப்புத்தகத்தில் இவ்விதமாய் பட்டம் சூட்டப்படுகின்றது. இது தற்செயலாக ஏற்பட்டதோ என்று நான் சந்தேகப் படுகின்றேன். தேவன் அந்த சமயத்தில் பவுலை ஆசியாவில் பிரசங்கிக்க அனுமதிக்காமல், மக்கெதோனியாவுக்குச் செல்ல அனுமதித்தது ஏன் என்ற புதிருக்கு இதுவே திறவுகோல் வார்த்தைகளாகும் என்று நான் நம்புகின்றேன்.

ரோமர் குடியேற்றப் பட்டணமானது அநேக சலுகை களைப் பெற்றிருந்தது. மற்ற அநேக சலுகைகளுடன், அங்கி

*ருந்த மக்கள் சுய ஆளுகை பெற்றவர்களாயிருந்து, ரோமா புரிக்கு வரி செலுத்தத் தேவையில்லாதிருந்தது. ரோமர் குடியேற்றப் பட்டணம் என்பது உண்மையில், அந்நிய மண் ணில் ஊன்றப்பட்ட ஒரு சிறு அளவு ரோம அரசு என்பது போலவே இருந்தது (வ. 21). அக்குடிமக்கள் ரோமானிய உடை அணிந்து, கிரேக்க மொழிக்குப் பதிலாக இலத்தீன் மொழியைப் பேசி, ரோமக் கலாச்சாரங்களை அநுசரித்து, நாட்டுப்பற்று என்ற அக்கினி மூண்டவர்களாய் இருந்தார்கள் (வ. 20, 21). சில வகையில், ரோமர் குடியேற்றப் பட்டணமானது ரோமா புரியைப் பார்க்கிலும் மேலானதாக இருந்தது.[11] இதற்கு முன் எப்போதும் இல்லாத வகையில் பவுல் பிலிப்பி பட்டணத்தில் இருக்கையில் ரோமக் கலாச்சாரத்தில் மூழ்கினார்.*

*தீவிரமான இந்த ரோமச் சூழ்நிலையில் பவுலுக்குக் கிடைத்த வெற்றியானது, ரோமாபுரியில் நற்செய்தி ஊழியம் செய்யும் கருத்தை அவர் மனதில் விதைத்திருக்கலாம். முன்ன தாகப் பவுல், பலவகைப்பட்ட முக்கிய பட்டணங்களில் சுவிசேஷத்தை அறிவித்து, அது அப்பட்டணங்களிலிருந்து அதன் சுற்றுப் புறங்களுக்குப் பரவுவதைப் பார்ப்பதோடு திருப்தியடைந்திருந்தார். சில வேளைகளில் அவரது மனதில், கர்த்தருடைய ஊழியமானது ரோமாபுரியில் உறுதியாக நிலை நாட்டப்பட்டு விட்டால், அது ஒவ்வொரு திசையிலும் ஒரு சில நூறு மைல்கள் மட்டுமின்றி இராஜ்யம் முழுவதும் பரவுமே என்ற உணர்வு ஏற்பட்டது! ஆகையால் அவர் ரோமாபுரி செல்லத் திட்டமிட்டார் (ரோமர் 1:9-13; 15:22-29). ஒருவேளை ரோமாபுரி செல்வதற்கான அவரது விருப்பமானது பிலிப்பி பட்டணத்தில் ஆரம்பித்திருக்கலாம். ஒருவேளை இதனா லேயே தேவன் பவுலை அங்கு போகும்படி வலியுறுத்தி யிருக்கலாம். மெக்கெதோனிய அழைப்பானது வெறுமனே ஒரு ரோமாபுரி மாகாணத்திற்கு வந்து ஊழியம் செய்யும்படியான அழைப்புக்கும் மேம்பட்டது என்றே நான் எண்ணுகின்றேன், இது பாவத்தில் இழந்து போகப்பட்ட ஒரு உலகத்தின் உதவிக்கான ஒரு கதறலாகும் என்றே நான் நம்புகின்றேன்!*

*எக்னேஷியன் சாலையில் பவுல், சீலா, லூக்கா மற்றும் தீமோத்தேயு ஆகியோர் வருகையில் அவர்களை ஒரு கணம் பாருங்கள். அந்த ரோமர் குடியேற்றப் பட்டணத்தில் அவர்களுக்கிருந்த அறைகூவலைச் சற்றுக் கற்பனை செய்ய*

முயற்சி செய்யுங்கள். தேவனுடைய திட்டத்தில் உள்ள சாத்தியக் கூறுகளையும் கவனியுங்கள், முழு ரோம ராஜ்யத் தையும் அணுகுவதைக் காட்டிலும் பிலிப்பி பட்டணமானது அதிகமான அறைகூவலைப் பிரதிநிதித்துவப் படுத்தியது!

**மனம் மாற்றப்பட்ட ஒருவர் (16:12ஆ-15)**

ஊழியக்காரர்கள் பிலிப்பி பட்டணத்தில் "சில நாள்" தங்கியிருந்ததாக வசனம் 12ன் முடிவுப் பகுதி கூறுகின்றது. அது எவ்வளவு நாள் என்று நாம் அறியவில்லை, ஆனால் அங்கு பவுலும் மற்றவர்களும் சபையை நிலைநாட்டினார்கள் - மற்ற எந்த சபையைக் காட்டிலும் பவுலுக்கு மிகவும் பிரியமாய் இருந்த அந்த சபையுடன் அதிக நெருக்கமாயிருந்தார். நாம் இனிமேல் பார்க்கப் போகின்றபடி, பவுலின் நலனில் தொடர்ந்து அக்கறை கொண்டிருந்தது பிலிப்பியில் இருந்த சபை மட்டுமே ஆகும். பிலிப்பியருக்குப் பவுல் எழுதின நிருபம் ஒரு அன்பின் கடிதமாகும் (பிலி. 1:3-5; 4:1).

அந்த சபையானது சாதகமற்ற ஒரு வழியிலேயே தொடங் கியது. நாம் அறிந்துள்ள வரையில் பிலிப்பி பட்டணத்தில் ஜெப ஆலயம் எதுவும் இருந்ததில்லை. ஒரு ஜெப ஆலயத்தை ஏற்படுத்துவதற்குப் பத்து யூதர்கள் மாத்திரமே தேவையா யிருந்தது, இது அந்தப் பட்டணத்தில் வெகு சில யூதர்கள் மட்டுமே இருந்ததைச் சுட்டிக்காட்டுகின்றது. ஆகையால் பவுல் தமது வழக்கத்தின்படி ஜெப ஆலயம் சென்று ஊழியத்தைத் தொடங்க முடியவில்லை. முதல் ஓய்வுநாள் வந்தபோது, "... நாங்கள் பட்டணத்துக்கு வெளியே போய், ஆற்றினருகே வழக்கமாய் ஜெபம் பண்ணுகிற இடத்தில் உட்கார்ந்து" (வ. 13அ) என்று லூக்கா குறிப்பிட்டார். நாடு கடத்தப்பட்ட நிலையில் இருந்தபோது யூதர்கள் ஆலயத்திற்குச் செல்ல முடியாதிருந்தபோது, அருகில் இருந்த ஆற்றங்கரையில் கூடி ஜெபிப்பதை வழக்கமாக மேற்கொண்டிருந்தார்கள் (சங். 137:1; எஸ்றா 8:15, 21) - ஒருவேளை சடங்காச்சாரமான கழுவுதல் களுக்கு அந்த ஆறு பயன்படுத்தப்படலாம். பிலிப்பி பட்டண வாசல்களின் அருகில் மேற்கில் ஏறக்குறைய ஒரு மைல் தூரத்தில் கேங்கிட்டஸ் என்ற ஆறு ஓடிக் கொண்டிருந்தது.[12] பவுலும் மற்றவர்களும் உண்மையான தேவனை விசுவாசிக்கக் கூடியவர்கள் யாரேனும் காணப்பட முடியுமா என்பதற்காக

அத்திசையில் சென்றார்கள்.

அவர்கள் அந்த ஆற்றை அடைந்த போது, அங்கு ஜெபம் பண்ணுவதற்கென்று கூடியிருந்த அநேகம் பெண்களைக் கண்டார்கள். (அவர்கள் திறந்த வெளியில் கூடினார்களா, ஒரு கூரையின் கீழ் இருந்தார்களா அல்லது ஆற்றோரத்தில் இருந்த ஒரு வீட்டில் கூடினார்களா என்பதை நாம் அறியவில்லை.) அவர்கள் யூதர்களா, யூதமார்க்கத்தமைந்தவர்களா அல்லது தேவனுக்குப் பயந்தவர்களா என்பதைப் பற்றி லூக்கா எதுவும் கூறவில்லை; அநேகமாக, அவர்கள் தேவனுக்குப் பயந்தவர்களாக இருக்கலாம். அங்கு ஆண்கள் யாரும் இல்லாதிருந்தது பற்றி ஊழியக்காரர்கள் ஏமாற்றமடைந்தார்களா இல்லையா என்பதை நான் அறியவில்லை. லூக்கா எளிமையாக, "... உட்கார்ந்து[13] அங்கே கூடிவந்த ஸ்திரீகளுக்கு உபதேசித்தோம்" (வ. 13ஆ)[14] என்று மட்டும் குறிப்பிட்டார். மக்கொதோனியாவின் ஆண் ஒருவர் ஊழியக்காரர்களை அழைத்தார், ஆனால் அவர்களால் முதலில் மனமாற்றம் அடைந்தவர்கள் பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

தேவனுக்குப் பயந்த பெண்களைக் கொண்டு தொடங்கப் பெற்ற சபை பிலிப்பி பட்டணத்தில் மட்டுமல்லாது உலக முழுவதிலும் நூற்றுக்கணக்கான இடங்களில் தேவபக்தியுள்ள பெண்களின் செல்வாக்கினால் உள்ளூர் சபைகள் இருக்கின்றன. எந்த ஒரு சபையும் அதில் உள்ள பெண்களின் ஆதரவின்றி தொடர்ந்து இயங்க முடியுமா என்று நான் ஐயப்படுகின்றேன். தேவனுடைய திட்டத்தில், பெண்கள் பிரசங்க மேடையை நிறைப்பவர்களல்ல, ஆனால் அவர்களின் இன்றியமையாத ஆதரவை எப்பொழுதும் குறைவாக மதிப்பிட்டு விடாதீர்கள்!

அப்பெண்களின் மத்தியில், "தியத்தீரா ஊராளும் இரத்தாம்பரம் விற்கிறவளும்[15] தேவனை வணங்குகிறவளுமாகிய லீதியாள்[16] என்னும் பேருள்ள ஒரு ஸ்திரீ" (வ. 14அ) இருந்தாள். லீதியாள் தனது பொருட்களை விற்பதற்காகத் தியத்தீரா ஊரில் இருந்து வந்த வியாபாரம் செய்யும் பெண்மணியாய் இருந்தார்கள்.[17] தியத்தீரா என்ற ஊரானது ஏஜியன் கடலின் நடுவே இருந்த ஆசியாவின் ரோம மாகாணத்தில் இருந்த ஊராகும் (பின்னாளில் இது ஆசியாவில் இருந்த ஏழு சபைகளில் ஒன்றின் அமைவிடமாயிற்று [வெளி. 1:11; 2:18-29]). பவுல் ஆசியாவுக்குச் செல்லாதபடிக்குத் தடைபண்ணப்பட்ட

பிறகு, அவர் பிலிப்பியில் மனமாற்றமடையச் செய்த முதல் நபர் ஆசியாவிலிருந்து வந்தவர் என்பதில் ஒரு முரண்பாட்டை நம்மால் காண முடிகின்றது.

லீதியாள் "இரத்தாம்பரம் விற்பவளாக" இருந்தார்கள். இரத்தாம்பரச் சாயமானது மிகவும் அரிய வகையைச் சேர்ந்த ஒரு மீனில் இருந்து துளித்துளியாக வடித்தெடுக்கப் படுவதாயிருந்தது,[18] இது மிகவும் விலை உயர்ந்ததாக இருந்தது. அரசர்களும் ஐசுவரியவான்களும் மட்டுமே இவ்வகை "ராஜரீக இரத்தாம்பர உடைகளை" அணிய முடியும் (லூக்கா 16:19). அத்துடன் லீதியாளுக்கு ஒரு பெரிய வீடு இருந்தது[19] என்ற உண்மையும் அந்த வீட்டில் அநேக வேலையாட்கள் (வ. 15) இருந்தார்கள் என்ற உண்மையும் சேர்ந்து, கர்த்தர் அப்பெண் மணியை உலகப்பிரகாரமாக அதிகமாய் ஆசீர்வதித்திருந்தார் என்று சுட்டிக்காட்டுகின்றன.

அந்தப் பெண்மணி "தேவனை வணங்குபவளாய்"[20] இருந்தது மிக முக்கியமான உண்மையாகும். வியாபாரத்தைக் காட்டிலும் ஆராதனைக்கு அப்பெண்மணி அதிக முக்கியத் துவம் கொடுத்தார். பிலிப்பி பட்டணத்தில் ஓய்வுநாள் என்பது ஒரு புனிதமான விடுமுறை நாளாய் இருந்ததில்லை; ஒரு தினாரை[21] ஈட்டுவதற்கேற்ற இன்னொரு நாளாகவே அது விளங்கியது. லீதியாளைப் பொறுத்தமட்டில் தேவனை தொழுது கொள்வதென்றால், அவர்கள் விருப்பத்துடன் தமது கடையை மூடி[22] தமது போட்டியாளர்களுக்கு ஒரு அனு கூலத்தை உண்டாக்குவது என்பதாகும்.

ஆயினும், லீதியாளுக்கு முன்பாக தேவனுடைய சத்தியம் வைக்கப்பட்டபோது அப்பெண்மணி அதைக் கவனிக்கவும் கற்றுக் கொள்ளவும் விரும்பினார்கள் என்பதே அவர்களைப் பற்றிய மிகவும் முக்கியமான உண்மையாகும். பேதுருவினி டத்தில், "தேவனாலே உமக்குக் கட்டளையிடப்பட்ட யாவையுங் கேட்கும்படிக்கு நாங்கள் எல்லாரும் இப்பொழுது இங்கே தேவ சமூகத்திலே கூடியிருக்கிறோம்" (அப். 10:22, 33) என்று கூறிய "நீதிமானும் தேவனுக்கு பயப்படுகிறவரும்" ஆகிய கொர்நேலியுவுக்கு இணையான பெண்பால் உறுப்பி னராக லீதியாள் இருக்கின்றார்கள். "லீதியாள் என்னும் பேருள்ள ஒரு ஸ்திரீ கேட்டுக் கொண்டிருந்தாள்; பவுல் சொல்லியவைகளைக் கவனிக்கும்படி கர்த்தர் அவள் இருதயத்

தைத் திறந்தருளினார்"[23] என்று லூக்கா கூறினார் (வ. 14ஆ).

"கர்த்தர் அவள் இருதயத்தைத் திறந்தருளினார்" என்ற வார்த்தைகளைப் பற்றி விளக்கம் கொடுப்பதற்குச் சற்று நாம் நிற்க வேண்டியதாயிருக்கின்றது. லீதியாளின் மனமாற்றத்தில் இந்த வார்த்தைகள் மிகவும் குறிப்பிடத் தக்கவைகள் ஆகும்; வேறு மனமாற்ற நிகழ்ச்சிகள் எதிலும், கேட்டுக் கொண்டிருந் தவர்களின் இருதயங்களைக் கர்த்தர் திறந்ததாகக் கூறப்பட வில்லை, இந்த விளக்கத்தின் குறிப்பிடத்தக்க அம்சம் என்ன?

விலகியிருக்கும் பாவியின் மீது "பரிசுத்த ஆவியானவரின் நேர்க்கிரியை" என்ற தங்களது உபதேசத்தை "நிரூபிப்பதற்கு" கால்வினிஸ்டுகள்[24] வசனம் 14 ஐப் பயன்படுத்துகின்றார்கள். அவர்கள், மனிதர்கள் பாவத்திலேயே பிறப்பதாகவும்,[25] மனிதர் களின் இருதயங்களில் பரிசுத்த ஆவியானவர் ஒரு அற்புதத்தை நிறைவேற்றாத வரையில், அவர்களால் சுவிசேஷத்தின் அழைப்புக்கு எவ்வகையிலும் பதில் கொடுக்க முடியாது என்பதாகவும் நம்புகின்றார்கள். ஆயினும், லீதியாள் தனது இருதயம் திறக்கப்படு முன்னதாக, பவுல் கூறியவைகளைக் கவனமாய்க் கேட்க முடிந்திருந்தது என்பதைக் கவனியுங்கள்; இவ்வசனப்பகுதியில் கால்வினிஸ்டுகளின் போதனை எதுவும் காணப்படுவதில்லை. ஆகையால் நாம் மறுபடியும், இந்த விளக்கத்தின் குறிப்பிடத்தக்க அம்சம் என்ன? என்று கேட்கின்றோம்.

தேவன் தமது முகவர் மூலம் ஒரு சில செயல்களைச் செய்யும்போது அதை தேவனே செய்தார் என்று கூறுவது லூக்காவின் வழக்கமாகும். எடுத்துக்காட்டாக, பவுலும் பர்னபாவும் முதல் பிரயாணத்தை முடித்துத் திரும்பியபோது, அவர்கள் அந்தியோகியாவில் இருந்த சபையாரிடத்தில், "தேவன் தங்களைக்கொண்டு செய்தவைகளையும், அவர் புறஜாதிகளுக்கு விசுவாசத்தின் கதவைத் திறந்ததையும்" அறிவித்தார்கள் (14:27; மீண்டும் 15:4 பார்க்கவும்). "தேவன் ... செய்தவைகளையும்" என்ற வார்த்தைகளையும், "தங்களைக் கொண்டு" என்ற அவர் பயன்படுத்திய முகவர்களையும் கவனியுங்கள். தேவன் புறஜாதியாரில் அநேகரை மனமாற்ற மடையச் செய்தார் - ஆனால் அவர் அதை பவுல் மற்றும் பர்னபா ஆகியோரின் பிரசங்கத்தின் மூலமாகவே செய்தார்.[26]

தேவன் சுவிசேஷப் பிரசங்கத்தின் மூலமாகவே லீதியாளின்

இருதயத்தைத் திறந்தார் என்பது தெளிவாகும்: அவள், "பவுல் சொல்லியவைகளைக் கவனிக்கும்படி ..." (வ. 14ஆ). பரிசுத்த ஆவியானவரின் வழி நடத்துதலானது மந்திரியின் மனமாற்றம் மற்றும் கொர்நேலியுவின் தரிசனம் ஆகியவற்றில் கொண்டிருந்த அதே நோக்கத்தையே லீதியாளின் மனமாற்றத்திலும் கொண்டிருந்தது: அது பாவியையும் பிரசங்கியாரையும் ஒன்று கூட்டியது (ரோமர் 1:16, 22; 10:13-17; எபே. 6:17; எபி. 4:12; யாக். 1:21).[27] R.C.H. லென்ஸ்கி அவர்கள், "கர்த்தர் இருதயத்தைத் திறக்கின்றார், ஆனால் தாழை நீக்கி கதவை இழுக்க அவர் வசனம் என்ற கரத்தையே பயன்படுத்துகின்றார் ... நாம் முன் செல்லுகையில் அக்கதவு திறக்கின்றது, ..." என்கிறார். நாம் படித்துள்ள மனமாற்ற நிகழ்ச்சிகளில் வரும் மற்ற பாவிகள் எல்லாருக்கும் செய்யாத ஒன்றைத் தேவன் லீதியாளுக்குச் செய்யவில்லை. "தேவன் பட்சபாதமுள்ளவரல்ல ..." (10:34). மற்ற யாவரும் இரட்சிக்கப்பட்ட அதே விதமாகவே லீதியாளும் இரட்சிக்கப் பட்டார்கள்: அப்பெண்மணி வசனத்தைக் கேட்டார்கள், வசனமானது அவர்களின் இருதயத்தைத் தொட்டது (2:37ஐக் கவனிக்கவும்), விசுவாசம் உண்டாயிற்று, கீழ்ப்படிதல் தொடர்ந்தது.

இன்னமும் இது, லூக்கா "கர்த்தர் அவள் இருதயத்தைத் திறந்தருளினார்" என்ற விளக்கத்தைப் பயன்படுத்தத் தேர்ந்து கொண்டது ஏன் என்பதை விவரிக்கவில்லை. வசனத்தினால் லீதியாள் அசைக்கப்பட்டதையே இது கூறுகின்றது. அங்கு நடந்த எல்லாவற்றிலும் லூக்கா தேவனுடைய கரத்தைப் பார்த்ததினால்தான் இந்தச் சொல்லாடலைப் பயன்படுத்தினார் என்று நான் ஆலோசிக்கின்றேன்: தேவன்தான் அவர்களை ஆசியா அல்லது பித்தினியாவுக்குப் போகவொட் டாமல் தடை செய்தார். தேவன்தான் அவர்களுக்குத் துரோவாவில் தரிசனத்தைக் கொடுத்திருந்தார். மேலும் தேவனுடைய அருளிரக்கத்தினால்தான் ஆற்றோரம் கூடியிருந்த ஏற்றுக் கொள்ளும் இருதயங்கள் உள்ளவர்களிடத்தில் அவர்கள் வந்து சேர்ந்தார்கள், அவருடைய ஆவியானவரே அவர்களின் பிரசங்கத்திற்கு ஏவுதல் கொடுத்திருந்தார். பவுலோ, லூக்காவோ, சீலாவோ அல்லது தீமோத்தேயுவோ லீதியாளின் இருதயத்தைத் திறக்கவில்லை; தேவனே இதைச் செய்த பெருமைக் குரியவர்! நாம் நடலாம், நீர் பாய்ச்சலாம், ஆனால் தேவனே

விளையச் செய்பவர் (1 கொரி. 3:6) என்பதை மறக்க வேண்டாம்!

லீதியாளின் இருதயம் திறக்கப்பட்டபோது, அப்பெண் மணி, "பவுல் சொல்லியவைகளுக்கு" (வ. 14ஆ) பதில்செயல் செய்தார்கள். வசனம் 15ல் அவளும் அவள் வீட்டாரும் ஞானஸ்நானம் பெற்றார்கள் என்று குறிப்பிடப்படுகின்றது. இது, ஆற்றோரம் கூடியிருந்த எல்லாரும் அல்லது பெரும்பாலானவர்கள் அப்பெண்மணியின் வீட்டார்தான் - அநேகமாய் அவர்கள் வீட்டு வேலைக்காரிகளாயிருக்கலாம் என்று சுட்டிக்காட்டுகின்றது. முழுகுதலுக்கான தண்ணீர் அருகிலேயே இருந்தது, அவர்கள் உடனடியாக கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானப்படுத்தப்படும்படி ஆற்றினுள் சென்றார்கள் என்பதில் சந்தேகம் இல்லை.[28]

லீதியாள் மற்றும் அப்பெண்மணியின் வீட்டார் ஆகியோர் ஞானஸ்நானம் பெற்றதைச் சித்தரிக்கும் பல ஓவியங்களை நான் கடந்த அநேக வருடங்களில் கண்டிருக்கின்றேன். அவை யாவும், மாற்றம் எதுவுமின்றி அமைதியான, அகலமான ஆறு ஒன்று புல் தரையரைருகில் ஓடும் சூழ்நிலையிலேயே சித்தரிக்கப்பட்டுள்ளன. கேங்கிட்டஸ் நதியோரத்தில் நின்ற ஒருவன் என்ற முறையில், நான் அந்த ஆறு குறுகலான, ஆழம் உள்ள, விரைவாய் ஓடும், ஓசையெழுப்பும், இருபுறமும் அடர்ந்த மரங்கள் கொண்ட ஒரு ஆறு என்று உங்களுக்குக் கூற முடியும்.

ஆற்றோரத்தை விட்டு நாம் அகலுமுன்பு, "அவருடைய வீட்டார்" என்ற சொற்றொடரைப் பற்றி நான் ஒரு வார்த்தை கூற வேண்டும். புதிய ஏற்பாட்டில் ''வீட்டாரின் ஞானஸ் நானங்கள்'' என்பதாகப் பின்வரும் நான்கு நிகழ்ச்சிகள் பதிவாகியுள்ளன: கொர்நேலியுவும் அவர் வீட்டாரும் (10:24, 28), லீதியாளும் அவள் வீட்டாரும் (16:15), பிலிப்பியச் சிறைச் சாலை அதிகாரியும் அவர் வீட்டாரும் (16:31-34) மற்றும் ஸ்தேவானுடைய வீட்டார் (1 கொரி. 1:16 மற்றும் அப். 18:8 ஐயும் காணவும்). குழந்தை ஞானஸ்நானத்தை வசன ரீதியாக நியாயப்படுத்த முயற்சி செய்பவர்கள் தங்கள் நிலைபாட்டை ''நிரூபிக்க'' இந்த ''வீட்டாரின் ஞானஸ்நானம்'' பற்றிய வசனப் பகுதிகளைப் பயன்படுத்துகின்றார்கள். அவர்கள், ''நிச்சயமாகவே இந்த நான்கில் ஒரு வீட்டாரிலாவது ஒரு

சிறு குழந்தையாவது இருந்திருக்கும்'' என்று இவர்கள் வாதிடுகின்றார்கள். ஆயினும் இவைகளில் மூன்று நிகழ்ச்சிகளில் பிரசங்கத்திற்குப் பதில்செயல் கொடுக்கத்தக்க வயது முதிர்ந்தவர்கள் மட்டுமே வீட்டில் இருந்தார்கள் என்பதை வசனமே தெளிவாக்குகின்றது (10:33, 43, 44, 46-48; 16:32-34; 1 கொரி. 16:15) என்றால், லீதியாளின் வீட்டாருடைய ஞானஸ்நானம் பற்றிய வசனப்பகுதி மட்டுமே அவர்களின் அடிப்படை "ஆதாரமாய்" இருக்கின்றது.

லீதியாளின் வீட்டாருடைய ஞானஸ்நானமானது குழந்தைகள் ஞானஸ்நானப்படுத்தப்பட வேண்டும் என்பதை நிரூபிக்கின்றதா? அந்நாளில் ஞானஸ்நானப்படுத்தப் பட்டவர்களில் ஒரு குழந்தை இருந்திருக்கும் என்பவர்களின் யூகங்களைக் கவனியுங்கள்: (1) அவர்கள், லீதியாள் திருமணமானவளாக அல்லது திருமணமாகியிருந்தவளாக இருந்திருப்பாள் என்று யூகிக்கின்றார்கள்.[29] (2) அவர்கள், அவளுக்குக் குழந்தைகள் இருந்திருக்கும் என்று யூகிக்கின்றார்கள். (3) அவர்கள், அவளுடைய குழந்தைகளில் ஒன்றாவது அப்போதுதான் பிறந்த சிறு குழந்தையாய் இருந்திருக்கும் என்று யூகிக்கின்றார்கள். (4) அவர்கள், லூக்கா மற்ற வசனப்பகுதிகளில் எல்லாம், ஞானஸ்நானம் பெறுமுன் விசுவாசித்திருக்க வேண்டும் என்று வலியுறுத்தியிருந்தும் (2:37, 38; 8:36-38) இவ்விடத்தில் ''வீட்டாரில்'' சிறு குழந்தையொன்றை அவர் (லூக்கா) உள்ளடக்கியதாக யூகிக்கின்றார்கள். எனக்கு நான்கு யூகங்களை அனுமதித்தால், இவை யாவையும் தலை கீழாக நான் "நிரூபிக்க" முடியும். இங்குள்ளது அங்கென்றும், நிலாவானது பச்சைப் பாலாடைக் கட்டியால் படைக்கப்பட்டதென்றும் நான் "நிரூபிக்க" முடியும். ஆனால் சத்தியத்தைக் கண்டறியும் வழி அதுவல்ல. கேங்கிட்டஸ் நதியில் அன்றைய தினம் சிறு குழந்தை ஒன்று ஞானஸ்நானப் படுத்தப்பட்டது என்பதற்கு வசனத்தில் எவ்விதமான காரணமும் தரப்படவில்லை.

லீதியாளின் நிறைவான குணத்தை இவ்விடத்தில் குறிப்பிட வேண்டும்: அப்பெண்மணி உபசரிப்புக் குணம் உள்ளவர்களாய் இருந்தார்கள் (ரோமர் 12:13; 1 பேது. 4:9). நாம், "அவளும் அவள் வீட்டாரும் ஞானஸ்நானம் பெற்ற பின்பு, அவள் எங்களை நோக்கி: நீங்கள் என்னைக் கர்த்தரிடத்தில் விசுவாசமுள்ளவளென்று எண்ணினால், என் வீட்டிலே

*வந்து தங்கியிருங்கள் என்று எங்களை வருந்திக் கேட்டுக் கொண்டாள்'' (வ. 15) என்று வாசிக்கின்றோம். ஒரு அழைப்பை ஏற்றுக்கொள்வது பற்றிப் பவுல் கலவையான உணர்வுகள் உடையவராய் இருந்திருக்க வேண்டும். ஒரு புறத்தில், விக்கிரகாராதனைக்காரரிடம் தங்குவதற்குப் பதில் விசுவாசியிடம் தங்கியிருப்பது என்பது சிறந்ததாகத் தோன்றியிருக்கலாம். ஆனால் மறுபுறத்தில், அது நெறி தவறாமை பற்றி ஒரு கேள்வியை எழுப்புவதாயிருந்தது: பெண்கள் நிறைந்த வீடு ஒன்றில் நான்கு ஆண்கள் சென்று தங்கினால் எப்படியிருக்கும்? ஆயினும் லீதியாள் தனது கேள்விக்கு "இல்லை" என்ற பதிலைப் பெறுவதாய் இல்லை. "எங்களை வருந்திக் கேட்டுக் கொண்டாள்" (வ. 15ஆ) என்று லூக்கா கூறினார். பவுல் பிலிப்பி பட்டணத்தில் தங்கியிருந்த எஞ்சிய நாட்களில் லீதியாளின் வீடே அவரது செயல்பாட்டின் அடிப்படைத் தளமாய் இருந்தது (16:40).*

## வேதவசனம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது

*நாம் அனைவருமே கடினமான தீர்மானங்களை எதிர் கொள்ளுகின்றோம்: நமது வாழ்க்கையில் நாம் என்ன செய்வது? நாம் திருமணம் முடிக்க வேண்டுமா? நாம் திருமணம் முடிக்க வேண்டுமென்றால் யாரைத் திருமணம் முடிப்பது? நாம் எங்கு வாழ்வது? இது போல நீங்கள் இன்னும் இப்பட்டியலை நீளமாக்க முடியும். தேவன் பவுலுக்குக் கொடுத்தது போல நமக்கு இன்று இரவில் ஒரு தரிசனத்தைத் தரமாட்டார், ஆனால் இன்றும் அவர் - தமது வசனத்தின் மூலம், தமது அருளிரக்கத்தின்படி திறந்து மூடும் கதவுகளின் மூலம், மற்றும் தெய்வீகமான நண்பர்களின் ஆலோசனையின் மூலம்-அழைக்கின்றார். ''நல்ல மனுஷனுடைய நடைகள் கர்த்தரால் உறுதிப்படும்'' (சங். 37:23அ) என்று நாம் வாசிக்கின்றோம். "உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக் கொள்; அப்பொழுது அவர் உன் பாதைகளைச் செவ்வைப் படுத்துவார்" (நீதி. 3:6). நமது வாழ்க்கைக்கான தேவனுடைய சித்தத்தை நாம் அறிய வேண்டுமென்றால், நமது வேதவசன*

பாடப் பகுதியானது பின்குறிப்பிட்ட வழிகளில் நாம் பதில் செயல் செய்ய வேண்டும் என்று ஆலோசனை கூறுகின்றது.

*(1) தயாராயிருங்கள்.* நாம் - தேவனுடைய அழைப்புக்கு உடனடியாகப் பதில்செயல் செய்யும்படி - எப்பொழுதும் தயாராய் இருக்க வேண்டும். பவுல் தரிசனத்தைக் கண்ட பிறகு, *"... அவர்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிக்கும்படி கர்த்தர் எங்களை அழைத்தாரென்று நாங்கள் நிச்சயித்துக் கொண்டு, உடனே மக்கெதோனியாவுக்குப் புறப்பட்டுப் போகப் பிரயத்தனம் பண்ணி"* (வ. 10) என்று லூக்கா கூறினார். உங்கள் வாழ்க்கைக்கான தேவனின் விசேஷித்த திட்டத்தை நீங்கள் அறிந்து கொண்டால், அவர் அழைக்கும்போது உடனே பதில் செயல் செய்ய நீங்கள் எப்பொழுதும் தயாராய் இருக்க வேண்டும்.

*(2) இணங்கக் கூடியவர்களாயிருங்கள்.* அடுத்தது, நாம்-தேவனுடைய நோக்கங்களும் திட்டங்களும் எப்பொழுதுமே தெளிவானதாயிராது என்பதைப் புரிந்து கொண்டு - இணங்கக் கூடியவர்களாய் இருக்க வேண்டும். பவுல் தெற்கு நோக்கிப் போக விரும்பினார், தேவன் அவரைத் தடுத்து நிறுத்தினார்; அவர் வடக்கு நோக்கிப் போக முயற்சி செய்தார், தேவன் அவரது பாதையை அடைத்தார். பவுலும் அவரது கூட்டாளி களும் தாங்கள் என்ன செய்ய வேண்டுமென்று தேவன் விரும்புகின்றார் என்பதை அறியாது குழப்பத்தில் ஆழ்ந்தார்கள் என்பது உறுதி. கடைசியாக அவர்கள் பிலிப்பி பட்டணத்தை அடைந்தபோது, பவுல் வழக்கமாகப் பிரசங்கிக்கத் தொடங்கும் இடம் - ஜெப ஆலயம் - கூட அங்கு இருக்க வில்லை. ஆற்றோரம் கூடிவந்த பெண்களைப் பார்க்கும் வரைக்கும் அவர்கள் அங்கு வந்ததின் நோக்கத்தைப் புரிந்து கொள்ள இயலவில்லை. இது போலவே, உங்கள் வாழ்க்கைக்கான தேவனுடைய சித்தத்தை நீங்கள் புரிந்து கொள்ளப் பிரயாசப்பட்டும் கூட, தேவனுடைய திட்டங்கள் எப்பொழுதுமே உங்களுக்குத் தெளிவாய்க் காணப்படாமல் போகலாம். நீங்கள் உங்கள் எண்ணங்களில் இணக்கமுள்ளவர்களாயிருந்து - நீங்கள் காண விரும்பும் பதிலைத் தேவன் உடனடியாகத் தராவிட்டால் அதனால் அதைரியமடையாமல் இருக்க வேண்டும்.

*(3) இயங்குபவர்களாயிருங்கள்.* வாய்ப்புகளுக்காகக் காத்திருப்பதற்குப் பதிலாக, நாமே வாய்ப்புகளை ஏற்படுத்து

கின்றவர்களாயிருக்க வேண்டும். ஒரு சில வேளையில், பவுலும் அவரது உடன் ஊழியர்களும் உட்கார்ந்து, “தேவன் நாம் என்ன செய்ய வேண்டும் என்பதைக் கூறுவதற்கு முடிவு செய்யும் வரை” காத்திருந்திருக்க முடிந்திருக்கலாம். அதற்குப் பதில் அவர்கள் இயங்கக் கூடியவர்களாயிருந்து, அவருக்கு ஊழியம் செய்யும் வாய்ப்பைத் தேடினார்கள்.

*(4) தாழ்மையுள்ளவர்களாயிருங்கள்.* நிறைவாக நாம் தாழ்மையுள்ளவர்களாயிருக்க வேண்டும், தேவனுடைய அழைப்புக்கு நாம் நேர்மறையாகப் பதில் கொடுத்தால் அவர் நம்மை ஆசீர்வதிப்பார் என்று விசுவாசிக்க வேண்டும். இரண்டாம் நற்செய்திப் பயணத்திற்கான பவுலின் திட்டமானது தேவனுடைய திட்டத்தில் இருந்து மாறுபட்டதாயிருந்தது. தேவனுடைய திட்டம் தெளிவாக்கப் பட்டபோது, அவர் (பவுல்) அதற்கு நேர்மறையான பதில்செயல் செய்தார் - தேவன் அவருடைய முயற்சிகளை ஆசீர்வதித்தார். ஆத்துமாக்கள் இரட்சிக்கப்பட்டன, மற்றும் சுவிசேஷத்திற்கென்று ஒரு புதிய கண்டமானது திறக்கப்பட்டது. அது போலவே, தேவனுடைய பதிலானது நாம் விரும்பும்படியானதாய் இல்லாத போது, நம்மில் சிலர் அதைக் கடினமானதாய் உணருகின்றோம். தேவனுடைய பதிலை ஏற்றுக்கொள்ளுமளவுக்கு நாம் தாழ்மையுள்ளவர்களாயிருக்க வேண்டும் - அவருடைய சித்தத்தை அறிந்து கொள்ளும்போது அதற்கு நாம் நேர்மறையான பதில்செயல் செய்ய வேண்டும். அப்படி நீங்கள் செய்தால், முடிவில் தேவன் உங்கள் முயற்சிகளை ஆசீர்வதிப்பார் என்று நான் உறுதி கூற முடியும்!

## முடிவுரை

இந்தப் பாடத்தின் ஓட்டத்தில், தேவனுடைய அழைப்புக்குப் பதில் கொடுக்க நீங்கள் எப்பொழுதும் தயாராய் இருக்க வேண்டுமென்று நான் உங்களை உற்சாகப்படுத்தியிருக்கின்றேன். நாம் இதை முடிக்கையில், இரண்டு குறிப்பிட்ட அழைப்புகளுக்கு நீங்கள் பதில் கொடுக்கும்படி உங்களை நான் உற்சாகப்படுத்துகின்றேன்.

நீங்கள் ஏற்கனவே ஒரு கிறிஸ்தவராயிருந்தால், “மக்கெதோனிய அழைப்புக்கு” பதில் கொடுக்கும்படி நான் உங்களை

வற்புறுத்துகின்றேன். இழந்துபோகப்பட்ட நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கானவர்களின் "வந்து எங்களுக்கு உதவுங்கள்" என்ற கதறலைக் கேட்கும்படி உங்கள் காதுகளைத் திறக்க கர்த்தரை அனுமதியுங்கள். ஒருவருமே ஆர்வமாயிருக்கவில்லை என்று உங்களுக்குக் காணப்பட்டால், பிலிப்பி பட்டணத்தை நினைவு கூருங்கள். நகரத்தில் இருந்தவர்கள் நகராதவர்களா யிருப்பினும், நதியோரத்தில் இருந்தவர்கள் நற்போதனையைக் கேட்க ஆயத்தமாய் இருந்தார்கள். அப்படிப்பட்டவர்களை நீங்கள் தேடினால் சத்தியத்தை நாடிய லீதியாள் மற்றும் அவளுடைய வீட்டார் போன்ற நேர்மையுள்ள ஆத்துமாக் களை நீங்கள் காண்பீர்கள்.

நீங்கள் ஒரு கிறிஸ்தவராய் இல்லாதிருந்தால், எல்லாவற்றி லும் மிகவும் முக்கியமான அழைப்புக்கு நீங்கள் பதில் கொடுக்கும்படி உங்களுக்குப் புத்தி சொல்லுகின்றேன்: இரட்சிப்படைந்து தேவனுடைய விசேஷித்த நபராகும் படியான அவரது அழைப்புக்குச் செவி கொடுங்கள்! 2 தெச. 2:14ல் பவுல், சுவிசேஷத்தினாலே தேவன் ஒவ்வொரு மனிதரையும் அழைப்பதாக வலியுறுத்தினார். சபை என்பது "அழைக்கப்பட்டவர்களின் கூட்டமாக"[30] உள்ளது - இதை வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால், நற்செய்தியின் அழைப்புக்குப் பதில் கொடுத்தவர்களின் கூட்டமே சபை ஆகும் (அப். 2:38, 41, 47). லீதியாள் மற்றும் அவளுடைய வீட்டாரைப் போல நீங்கள் பதில் கொடுக்காதிருந்தால்,தேவன் உங்கள் இருதயத்தைத் திறக்க அனுமதியுங்கள் - லீதியாள் மற்றும் அவள் வீட்டாரைப் போல உடனே ஞானஸ்நானம் பெறுங்கள்.

## பிரசங்கக் குறிப்புகள்

அப். நடபடிகள் புத்தகத்தில் உள்ள மனமாற்றங்கள் பற்றிய தொடர் பிரசங்கங்களை நீங்கள் பிரசங்கித்தால், இந்த கட்டுரையில் உள்ள விபரங்களை - மற்றும் "அப். நட. 4" ன் முதல் பாடத்தில் லீதியாளைப் பற்றி உள்ள விபரங்களை - நீங்கள் எடுத்துக் கையாளலாம்.

"ஜெபம் பண்ணும் இடம்" (வ. 13) என்ற தலைப்புள்ள

*பாடத்தின் கீழ் துணைத் தலைப்புக்களாக, "ஜெபம் பண்ணும் இடம்", "பேசும் இடம்", "கேட்கும் இடம்,", "கீழ்ப்படியும் இடம்" மற்றும் "உபசரிக்கும் இடம்" (லீதியாளின் அளிப்பு) போன்றவைகள் உள்ளடக்கப்பட முடியும்.*

*''ஒரு ஸ்திரீ'' (வ. 14) என்று அழைக்கப்படும் ஒரு பிரசங்கமானது லீதியாளின் பண்புகளின் மேல் கவனம் செலுத்தவதாய் அமையக்கூடும்: வியாபாரம் செய்யும் பெண், தொழுதுகொள்ளும் பெண், கவனித்துக் கேட்கும் பெண், பதில் கொடுக்கும் பெண், உபசரிக்கும் பெண். இப்பாடத்தில், பெண்கள் எவ்விதம் கர்த்தரின் ஊழியத்தில் இன்றியமையா தவர்களாய் இருக்கின்றார்கள் என்பதை வலியுறுத்தவும்.*

---

குறிப்புகள்

*[1]இந்தப் பாடத்தில் "கிழக்கு" மற்றும் "மேற்கு" ஆகியவை இன்று நாம் ஆசியா மற்றும் ஐரோப்பா என்று அழைக்கும் கண்டங்களைக் குறிக்கின்றது. [2]பவுல் மக்கெதோனியாவுக்குச் செல்லும் முன்பே ரோமாபுரியில் கிறிஸ்தவர்கள் இருந்திருக்க வாய்ப்புண்டு (2:10), ஆனாலும் பவுலும் அவரது தோழர்களும் மக்கெதோனியா செல்லும் வரையிலும் ரோம அரசின் மேற்குப் பகுதியில் முறைப்படியான ஊழியம் நடந்ததற்கான சான்று எதுவும் இல்லை. [3]துரோவாவில் ஊழியம் செய்யும்படியான தேவனுடைய திட்டம் எதுவும் இருந்ததாக அவர்கள் எண்ணும்படி காணப்படவில்லை. குறைந்த பட்சம் அவர்கள் அங்கு பிரசங்கம் செய்தார்கள் என்பதற்கு ஆதாரம் இல்லை. பின்னாளில் துரோவாவில் ஒரு சபை நிலைநாட்டப்பட்டது (20:6-12; 2 கொரி. 2:12 ஐயும் காணவும்). [4]"அப். நட. 2" இதழில் பக்கம் 262-263ல் உள்ள குறிப்புகளையும், 10:3ஐயும் காணவும். [5]ஆங்கிலத்தில் "a certain man of Macedonia" என்று மொழிபெயர்க்கப்பட்ட சொற்றொடரானது மூலமொழியினால் ஆதரிக்கப்படுகின்றது. "Certain" என்ற வார்த்தையானது இந்த "certain man" என்பது யாராக இருக்க முடியும் என்பதை யூகிக்கும்படி செய்கின்றது. இது மகா அலெக்சாந்தராயிருக்கலாம் என்பது மிகவும் வசீகரமான ஒரு யூகமாகும். இவர் பவுலால் அடையாளம் கண்டு கொள்ளப் பட்டாரா இல்லையா என்பது பற்றிய கருத்து எதுவும் நாம் அறியவில்லை. [6]"சுவிசேஷத்தை அறிவிக்கும்படி கர்த்தர் எங்களை அழைத்தாரென்று. ..." என லூக்கா கூறிய உண்மையிலிருந்து லூக்காவும் சிறிது பிரசங்கம் செய்யக் கூடியவரா யிருந்தார் என்று அறிகின்றோம். (16:13லும் "நாங்கள்'' என்ற வார்த்தையைக் கவனிக்கவும்). [7]துரோவாவிலிருந்து நெயாப்போலி சென்ற இப்பயணத்திற்கு இரண்டு நாட்களே ஆனது. பின்னாளில், திரும்பி வர இதே பயணத்திற்கு ஐந்து நாட்களாயிற்று (20:6). [8]இச்சமயத்தில் அவர்கள் நெயாப்போலியில் பிரசங்கித்தார் கள் என்பதற்கான பதிவுகள் எதுவும் இல்லை. பிலிப்பியில் வசனம் நிலைநாட்டப் பட்டால் இயல்பாகவே அது நெயாப்போலியிலும் பரவும் என்று பவுல் அறிந்துணர்ந்திருக்கலாம். [9]"மக்கெதோனியாவின் ஒரு மாகாணத்தில் முதலில் இருந்த'' நகரமாக லூக்கா இதைக் குறிப்பிட்டிருக்கக் கூடிய சாத்தியக் கூறு ஒன்றும்*

உள்ளது. மக்கெதோனியாவானது நான்கு மாகாணங்களாப் பிரிக்கப்பட்டிருந்தது, அதில் கிழக்கில் இருந்த முதலாவது மாகாணத்தில் பிலிப்பி பட்டணம் இருந்தது. [10]மூலமொழியில் "குடியேற்ற" என்று மட்டுமே உள்ளது, ஆனால் லூக்காவின் வாசகர்கள் அதை ஒரு ரோமரின் குடியேற்றப் பட்டணம் என்று புரிந்திருப்பார்கள். "ரோமர் குடியேற்றம்" என்ற சொற்றொடரின் முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்ள நாம் பிலிப்பியின் வரலாற்றைச் சற்று அறிந்திருப்பது நல்லது: பிலிப்பி என்பது தொடக்கத்தில் "வசந்தங்கள்" என்ற அர்த்தங் கொள்ளும் Crenides என்ற பெயருடைய ஒரு கிராமமாய் இருந்தது (இன்றைய நாளில் *Krinides* என்ற கிராமம் பிலிப்பியின் சிதிலங்களின் அருகில் உள்ளது). அங்கு இருந்த தங்கமலை ஒன்றின் காரணமாக மாக்தோனின் இரண்டாம் பிலிப்பு அந்த கிராமத்தின்மேல் ஆர்வம் காட்டத் தொடங்கினார். அவர் அந்நகருக்குக் கோட்டையைக் கட்டி அதற்கு பிலிப்போய் என்று மறுபேரிட்டார். பின்னாளில், ரோமக் குடியரசின் தலைவிதியை நிர்ணயித்த புகழ்பெற்ற யுத்தமொன்று பிலிப்பியின் வெளிப்புறமிருந்த சமவெளிகளில் நடந்தது. (ஷேக்ஸ்பியர், Julius Caesar என்ற தமது நாடகத்தில் இந்த யுத்தத்தைப் பற்றிக் குறிப்பிட்டார்.) அங்கு ஆக்டேவியனும் (அகுஸ்து), அந்தோனியும், ஜுலியஸ் சீசரைக் கொலை செய்த புரூட்டஸையும் கேஸியுஸையும் தோற்கடித்தார்கள். அகுஸ்து பேரரசனான போது (லூக். 2:1), பிலிப்பி பட்டணத்தை அவர் ஒரு ரோமக் குடியேற்றப் பட்டணமாக்கினார். அப்பொழுது அந்தப் பட்டணம் Colonia Julia Augustus Philippensium என்று அறியப்பட்டிருந்தது. லூக்கா அப்பட்டணத்தின் பொதுப் பெயரைப் (Philip + *polis* [city] = Philip's city) பயன்படுத்தினார்.

[11]ரோமாபுரியே கூட அநேக கலாச்சாரங்களின் கலவையினால் மாநகரப் பண்பைப் பெற்றிருந்தது. எடுத்துக்காட்டாக, ரோமாபுரியில் ஏராளமான யூதர்கள் இருந்தார்கள், அநேக ஜெப ஆலயங்களும் இருந்தன (18:2; 28:17). இதற்கு முரண்பாடாக, பிலிப்பியில் சில யூதர்களே இருந்தனர், ஜெப ஆலயம் ஒன்று கூட இல்லாதிருந்தது. [12]நான் அறிந்த வரையிலும் பிலிப்பியின் சிதிலங்களுக்கு அருகே கேங்கிட்டஸ் என்ற ஒரே ஒரு ஆறு மட்டும் தான் ஓடுகின்றது, ஆகவே அப். 16ல் குறிப்பிடப்படுவது இது தான் என்று நாம் நிச்சயிக்க முடியும். [13]யூத போதகர்கள் போதிக்கையில் சாதாரணமாக உட்கார்ந்து போதிப்பதே வழக்கமாகும் (மத். 5:1). [14]தேவபக்தியுள்ள இப்பெண்கள் ஓய்வுநாள் தோறும் ஆற்றோரத்தில் கூடி வந்த இந்த செயலானது பவுலும் மற்றவர்களும் பிலிப்பி வரச் செய்து அங்கு தேவன் செய்வித்த ஊழியத்திற்கு ஒரு பகுதி காரணம் என்பது உறுதியானதாகும். [15]மூல பாஷையில் "a seller of purple" என்று தான் உள்ளது. லீதியாள் ஒருவேளை சிவப்புச் சாயம் விற்பவளாயிருந்திருக்கவும் சாத்தியக் கூறு உள்ளது. (NASB மற்றும் தமிழ் மொழிபெயர்ப்புகளில் சுட்டிக்காட்டப்படுவது போல) அவள் இரத்தாம்பரம் (சிவப்புச் சாயமேற்றப்பட்ட உடை) விற்பவளாய் இருந்திருக்கவே அதிகம் வாய்ப்புண்டு. வரலாற்றில் காணுகையில், தியத்தீரா ஊரானது இரத்தாம்பரம் தயாரிப்பதில் குறிப்பிடத் தக்கதாய் இருந்தது (காஞ்சிபுரத்தில் பட்டுப் புடவைகள் தயாராவது போன்றதாகும்). [16]லீதியாள் என்பது ஒரு பொதுவான பெயராய் இருந்தது. லீதியா (Lydia) என்ற பழங்கால இராஜ்யத்தின் எல்லைப் பகுதியில் தியத்தீரா ஊர் அமைந்திருந்தது. [17]ஆம், கிறிஸ்தவப் பெண்கள் வியாபாரம் செய்ய முடியும். கிறிஸ்தவத் தாய்மார்கள் (நம்மிடையே புறக்கணிக்கப்பட்ட குழந்தைகள் அநேகர் இருப்பதால்) வீட்டின் புறம்பே வேலைக்குச் செல்லாமல் இருப்பதையே நான் விரும்புகின்றேன், ஆனால் அவர்கள் தங்கள் முன்னுரிமையுள்ள பணிகளைச் செய்து முடிக்கக் கூடுமென்றால், வசனரீதியாக வெளியில் சென்றும் வேலை பார்க்க முடியும் - அவர்கள் வீட்டை பாதுகாப்பது என்பது தேவனால் தங்களுக்குக் கொடுக்கப்பட்ட பணி என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும் (தீத்து 2:4, 5).

நீதிமொழிகள் 31:10-31ல் காணப்படும் குணசாலியான ஸ்திரீ அநேக வியாபாரங்களில் ஈடுபட்டிருந்தாலும், தனது குடும்பத்தைக் கவனிப்பதைப் புறக்கணியாமல் இருக்கின்றாள். [18]துருக்கிச் சிவப்பென்று அழைக்கப்படுகின்ற, மேடர் என்ற தாவரத்தின் வேரிலிருந்து பிழிந்தெடுக்கப்படும் சாயத்தினால் வண்ண மூட்டப்பட்ட துணியை லீதியாள் விற்று வந்தாள் என்று சிலர் கருதுகின்றார்கள். ஆயினும் மூலவசனத்தில் சிவப்பு ஆடை என்று கூறாமல், purple fabric என்றுதான் கூறப்பட்டுள்ளது. இந்தச் சாயமானது ஒரு வகை மீனில் இருந்து வடித்தெடுக்கப் படுவதாகவே உள்ளது. [19]அந்த வீடானது அவளையும் அவளது வேலைக்காரிகளை யும், நான்கு ஊழியக்காரர்களையும் கொள்ளக் கூடிய அளவு பெரிதாய் இருந்தது. [20]தேவனுக்கு பயந்தவர்களைக் குறிப்பிட அப்போஸ்தலருடைய நடபடிகளில் இந்தச் சொற்றொடர் அநேக முறைகள் பயன்படுத்தப்படுகின்றது.

[21]தினார் (தினேரியுஸ்) என்பது சாதாரணக் கூலியாளின் ஒருநாள் ஊதியமாய்க் கருதப்படும் ஒரு நாணயமாகும். [22]அந்நிய நாட்டில் இருந்த யூதர்கள் ஓய்வுநாள் அன்று தங்கள் கடைகளை மூடி வைப்பது வழக்கம்; லீதியாளும் இதையே செய்திருக்க வேண்டும். இது (கடை திறந்து வியாபாரம் செய்திருக்கக் கூடிய) அவளது வேலைக்காரிகளும் ஆற்றோரத்தில் அவளுடன் இருந்ததைச் சுட்டிக்காட்டுகின்றது. [23]எல்லாரும் பேசிக் கொண்டிருந்தாலும் (வ. 13) பவுல் பிரதானப் பேச்சாளராய்க் காணப்பட்டுள்ளார் (14:12ஐக் காணவும்). [24]புரொட்டெஸ்டன்டு சீர்திருத்தத்தின்போது புகழ் மிக்கதொரு மார்க்கத் தலைவராயிருந்த ஜான் கால்வினின் அடிப்படைக் கொள்கைகளை ஏற்றுக் கொள்ளும் ஒருவர் கால்வினிஸ்டு எனப்படுகின்றார். அநேக நாமகரணக் கூட்டங்கள் கால்வினின் நிலைப்பாடுகள் சிலவற்றை ஏற்றுக் கொள்கின்றன. [25]இது ''பாரம்பரியம் முற்றிலும் நிர்மூலமாகுதல்'' என்ற கொள்கை என அழைக்கப்படுகின்றது. வேதவசனங்களில் இது போதிக்கப்படுவதில்லை (எசேக்கியேல் 18:20; மத். 18:3) ஆகியவற்றைக் காணவும். [26]15:12ல் இதே போன்ற சொல் வழக்கு பயன்படுத்தப்பட்டுள்ளது, ''தங்களைக் கொண்டு'' என்ற வார்த்தைகளில் முகமை (யாரைக் கொண்டு செயல்படுத்தப் பட்டது என்பது) சுட்டிக்காட்டப்படுகின்றது. பழைய ஏற்பாட்டு எடுத்துக்காட்டு ஒன்றை சங்கீதம் 105:41 ல் காணவும்: தேவன் "கன்மலையைத் திறந்தார்" - ஆனால் அவர் அதை மோசேயின் செயல் என்ற முகமையின் மூலம் செய்தார் (யாத். 17:1-7). [27]"இருதயத்தைத் திறந்தருளினார்" என்ற சொற்றொடரானது லீதியாள் ஏதோ ஒரு வகையில் தனது இருதயத்தை மூடி வைத்திருந்தாள் என்பதைச் சுட்டிக் காட்டுவதாகச் சிலர் நம்புகின்றார்கள். ஆயினும், அவளது இருதயமானது தப்பெண்ணத்தினால் மூடப்பட்டிராமல், அறியாமையினாலேயே மூடப்பட்டிருந் திருக்கும். [28]அநேகமாக அவர்கள் சீலா, லூக்கா அல்லது தீமோத்தேயுவினால் ஞானஸ்நானப் படுத்தப்பட்டிருக்கலாம். பவுல் தாம் ஞானஸ்நானம் கொடுப்ப தில்லை என்பதை ஒரு நியதியாகவே வைத்திருந்தார் (1 கொரி. 1:14-17). [29]இன்றைய நாட்களில் அநேக சமூகங்களில் ஒரு குழந்தையுடன் இருக்கும் பெண் திருமணமானவளாகவோ அல்லது திருமணமாகியிருந்தவளாகவோ கருதப்படுவ தில்லை, ஆனால் அந்த நாட்களில் அவ்வாறே கருதப்பட்டது. [30]"அப். நட. 1" இதழில் சொற்பொருள் அகராதியில் "Church" - சபை என்ற வார்த்தையின் கீழ் காணவும்.